மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 255, திரு. தா. வேடியப்பன்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

255—

போளூரில் கால் நடை கன்றுகள் வளர்ப்புப் பண்ணை

*10921 — திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போளூரில் கால் நடைக் கன்றுகள் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) போளூரில் கால்நடை கன்றுகள் வளர்ப்பு பண்ணை ஏற்படுத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சார்பில், இப்படிப்பட்ட திட்டங்களில்—இன்று கால்நடைகள் எல்லாம் பல பகுதிகளிலே அழிந்து கொண்டே வருகின்றன. நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்களும், கறவை மாடுகளை எல்லாம் பல வெளி நாடுகளிலேயிருந்து வாங்கிக் கொண்டு வரலாம் என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால், இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம்—பால் பெருக்குத் திட்டங்கள் எல்லாம் —சிறப்பாக செயல்படுவதற்கு, நம்முடைய தமிழக அரசின் சார்பில், அனைத்து ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்பட்ட கன்று வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தினால், நம்முடைய தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய ஒரு நல்ல திட்டமாக இருக்கும். எனவே, கருணை கூர்ந்து புரட்சித் தலைவியினுடைய அரசு சார்பில், பண்ணைகளை ஏற்படுத்த, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளை வளர்ப்பதற்கு தனிப்பட்டவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகள் அல்லது விவசாயிகள் அவற்றை வைத்து வளர்க்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவ உதவிகள் போன்றவற்றை எல்லாம், இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. அரசு மட்டுமே பண்ணைகளை நடத்தி வருவதால் மக்களுக்குப் பயன் இராது என்பதை அரசு கருத்தில் கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளை வருகின்ற கால் நடை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தேன். அந்த நேரத்தில், என்னுடைய போளூர் பகுதியில் இப்படிப்பட்ட கன்றுகள் வளர்ப்புப் பண்ணை அமைப்பதற்காக ஏறத்தாழ 15 ஏக்கர் நிலத்தை பார்வையிட்ட போது அதற்குண்டான இடத்தினுடைய ''மேப்'' எல்லாம் தயார் செய்து கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட இடத்தில், இந்தத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சார்பில் செயல்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பண்ணை அமைக்க வேண்டிய கால கட்டம் வருகிற போது, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 256, செல்வி 256—எல். சுலோசனா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

கல்லாறு அரசுப் பழப்பண்ணைப் பகுதியில் மூலிகைகள் வளர்த்தல்

*14236—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லாறு அரசுப் பழப்பண்ணைப் பகுதியில் மூலிகைகளை வளர்த்து சித்த மருத்துவத்திற்கு உதவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?